**தலைப்பு 204 - இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 204 – இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 யூன் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **பந்தியின் தொடர்பு** | **அமுல்படுத்தப்படாத பரிந்துரைகள்** | **இந்த அறிக்கையின் பந்தியின் தொடர்பு** |
|---|---|---|
| 1.6.1(அ) | 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 07/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் பதிவு உரித்து தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அரச ஒருங்கிணைப்பு, அரசகரும மொழிகள், சமூதாய முன்னேற்றம் மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2019 சனவரி 22 ஆம் திகதி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட இலக்கம் KF 9142 என்ற வாகனத்தின் உரித்தை தீர்த்து வைத்து பெறுமதி நிதியல்லா சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1.6.1 |

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரச ஒருங்கிணைப்பு, அரசகரும மொழிகள், சமூதாய முன்னேற்றம் மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2019 சனவரி மாதத்தின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட வாகனத்தின் உரித்தை தீர்த்து வைக்கப்பட்டிருந்த போது அப்பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்களைச் சரியாக மதிப்பீடு செய்து நிதிகூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டுக்குரிய 2024 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட் நான்கு விடயங்களுக்குரிய கூட்டுமொத்தான ரூபா 1,322,716 ஆன செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் கீழ் காண்பிக்கப்படாதிருந்ததுடன் CIGAS இணையத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மென்பொருளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் அறிக்கைகள் வெற்று அறிக்கையாக நிதிக்கூற்றுகளில் இணைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் கணக்குளில் வைக்கப்பட்ட முறையிலே 2023 ஆம் ஆண்டின் போதும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**2.2 பிரதான கணக்கீட்டு உத்தியேதகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லவேண்டியமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமானதாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையம் அந்த மீளாய்வு ஒன்று எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சேசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தி | 266,762 | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ஒரு வருட காலத்திலிருந்து அறவேண்டியதாகக் காணப்படுகின்ற ரூபா | சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய இடர்கடன் மீதியான ரூபா 220,300 தவணையாக | நிலுவைக் கடன் மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| ன் 4.2.5, 4.4, 4.5, 4.6 மற்றும் 6.3 உபபிரிவுகள் | 220,300 இடர் கடன் மீதி மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர் மூன்று பேருகளிடமிருந்து 29 வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் இருந்தும் அறவேண்டியதாகக் காணப்படுகின்ற ரூபா 46,462 கடன்மீதிகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்துவதற்கு இனங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 46,462 கடன் மீதியை பதிவழிப்பதற்கு கோரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதி இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை | திணைக்களத்திற்குரிய வாகனம் தொடர்பாக எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளாதிருந்ததுடன் வாகனம் தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் மாதாந்த போக்குவரத்து சேவைக் குறிப்புக்கள் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய அலுவலகத்திற்கு வருகைதந்த செயற்பாடுகளினால் மேற்கொள்ள முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 என்ற பொது அரச நிதி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டிற்கான வருடாந்த பெறுகைத்திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து அதற்கான பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் அங்கீகாரம் பெற்று அதன் பிரதி ஒன்று தேசிய பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரசநிதி திணைக்களத்திற்கு அனுப்பவேண்டி இருந்த போதிலும் | 2025 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வருடாந்தப் பெறுகைகள் திட்டம் உரிய கால எல்லையில் தயாரித்து அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

மீளாய்வாண்டின் பெறுகைத் திட்டத்திற்காக அங்கீகாரம் பெற்று பிரதி அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல், பொருள் மெய்மையாய்வு அறிக்கை, குறித்துரைத்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல், வருடாந்த பொருள் மெய்மையாய்வில் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள், பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகள் குறித்துரைத்த காலத்தில் மேற்கொள்ளல், குழாம் வாகனங்களுக்காக நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரித்து குறித்துரைத்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல், வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் பேணிச்செல்லல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்குதல், வாகனங்களின் எரிபொருள் எரிவினை மீண்டும் பரீட்சித்தல், குறித்துரைத்த திகதியில் வங்கி இணக்கக்கூற்றுக்களைத் தயாரித்து உறுதிப்படுத்தி கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் மற்றும் செயல் நிமித்தம் உபகட்டுநிதி அந்த கால எல்லையில் முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் சேர்த்து வைத்தல் போன்ற நிறைவேற்றவேண்டிய விடயங்கள் நிறைவேற்றப்படாதிருந்த போதும் அவற்றை உரியவாறு நிறைவேற்றியமைக்கு மீளாய்வாண்டின் வரைவு செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறிப்பிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்ளபடியான தகவல்கள் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு கண்காணித்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2002 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டியொன்று 2015 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு குறிப்பிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய தீர்மானங்களை விரைவாக அமுல்படுத்துதல் வேண்டும். |

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக்கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டி இருந்த போதிலும் திணைக்களத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களான பணிப்பாளர், கணக்காளர், சாரதிகளை உள்ளடக்கிய உத்தியோகத்தளை பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைப்பதற்குரிய விண்ணப்பப்பத்திரம் திறைசேரிக்கு 2023 நவம்பர் மாதம் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களின் பிணை அறவிடப்படல் வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் திணைக்கள நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற நாவலர் கலாசார நிலையம் மற்றும் குருகுலம் ஆனைப்பந்தி உபஅலுவலகம் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் அதற்குரிய நிலம் யாழ்ப்பாண மாநகர சபையிலிருந்து திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காணியை யாழ்ப்பாண மாநகர சபையிலிருந்து திணைக்களத்திற்கு கையேற்பதற்கு வழக்கொன்று தொடரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய கையேற்றல் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தால் கோவில்களுக்காக நிதியுதவி வழங்குவதற்குரிய கோவில்களை தெரிவு செய்தல், வழங்கப்படுகின்ற நிதி உதவியின் அளவு மற்றும் முன்னுரிமை போன்ற விடயங்களை உள்ளடக்கி அங்கீகரிக்கப்பட்ட குறிகாட்டிகள் மற்றும் திட்ட முறைமையொன்று காணப்படாமையினால் உள்ளபடியாக நிதி உதவி தேவையான கோவில்களை இணங்கண்டு அவற்றுக்கு நிதி உதவி வழங்கப்படுகின்றமை அவதானிக்கப்படவில்லை. | நிதி உதவி தேவையான கோவில்களை இனங்கண்டு அவற்றுக்கு நிதி உதவி வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதி உதவி வழங்கும் போது உள்ளபடியாக உதவி தேவையான கோவில்களை இணங்கண்டு அவற்றுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். |
| (இ) | 2022 (2023) ஆம் ஆண்டுக்கான தேசிய நிர்மாண போட்டியில் அறநெறிப் பாடசாலை மட்டம், பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் தேசிய மட்டத்திற்குரிய போட்டிகள் ரூபா 4,310,630 செலவினத்தில் 2023 சனவரி முதல் திசெம்பர் மாதம் வரையான காலத்தில் நடாத்தி பெறுபேறுகள் | சான்றிதழ் மற்றும் பரிசு கையளித்தல் 2024 ஆகஸ்ட் மாதம் நடாத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | போட்டிகளுக்குரிய சான்றிதழ் மற்றும் பரிசுகள் கையளித்தல் விரைவாக மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய சான்றிதழ் மற்றும் பரிசில்கள் கையளித்தல் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(4) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதி முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதி முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**5. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதி 18/2001 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்கள் ஒரே நிலையத்தில் சேவையாற்றி சகல உத்தியோகத்தர்களும் வேறு சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்காக சந்தர்ப்பம் வழங்க வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருடங்கள் முதல் 35 வருடங்கள் வரையிலான காலத்தைப் பூர்த்தி செய்த 117 உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அரச நிர்வாக அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச நிர்வாக அமைச்சுடன் தொடர்பினை ஏற்படுத்தி நீண்ட காலம் முதல் நிறுவனத்தில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |